# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 67 — 1973 ජූලි 06 වැනි සිකුරාදා — 1973.07.06

67 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 06 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 657 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 662 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### வெற்றுச் சீமெந்துப் பைகள் முதலியவற்றை வாங்குவதற்கும் எடுத்துச் செல்வதற்குமான கேள்விப்பத்திரங்கள்

நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள இரத்தினபுரி சப்புரகமுவ பிராந்தியத்தின் கீழ் குறிக்கும்—

(அ) ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள இரத்தினபுரி மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதிகள்.

(ஆ) ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள கேகாலை மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதிகள்.

ஆகிய இடங்களில் நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள சப்பிரகமுவ பிராந்திய அலுவலக சபைத் தலைவர் அவர்களால் வெற்றுச் சீமெந்து கடுதாசி பைகள் ஆகியவற்றை வாங்கவும் எடுத்துச் செல்லவும், இலங்கையர்களிடம் இருந்தும் இலங்கையர் ஸ்தாபனங்களிடம் இருந்தும், கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கா அல்லது கேகாலை மாவட்டத்திற்கா என்பதை கேள்விப்பத்திரங்களில் தெளிவாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் 24.7.73 அன்று முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சப்பிரகமுவ பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்திலோ அல்லது எந்த ஒரு கச்சேரியிலோ குறிப்பிடப்பட்ட இருமாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கேள்விப்பத்திரக் கட்டுப்பத்திரபணமாக ரூபா 50/- ஐ செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டினை சமர்ப்பிக்குமிடத்து 23-7-73 அன்று பிற்பகல் 2 மணிவரை கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் 24-7-73 அன்று முற்பகல் 11 மணிக்கு இரத்தினபுரியில் உள்ள சப்பிரகமுவப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தோர் அவ்விடத்தில் சமுகமளிக்க முடியும்.

4. இவ் ஒப்பந்தங்கள் 31.12.1973 வரை நீடிக்கும். மேலதிக விபரங்களை இரத்தினபுரியில் உள்ள சப்பிரகமுவ பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. செல்வத்துரை,
சப்பிரகமுவ பிராந்திய
வேலைகள் பணிப்பாளர்.

சப்பிரகமுவ பிராந்திய
வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,
இரத்தினபுரி,
25-6-73.

7-127—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

### இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம்

450,000 சோடிகள் கொண்ட தட்டைத் தகரத் தகடுகளையும் துணைக்கருவிகளையும் வழங்கிக்கொள்வதற்கான கேள்வி

1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆந் தேதி காலை 10.00 மணிக்கு முடிவடையுமென பட்டோலைப்படுத்தப்பட்டிருந்த மேற் கூறப்பட்ட கேள்வியின் முடிவு தேதி 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் தேதி காலை 10.000 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

பண்டசாலை வழங்கல்க்ள் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு-3.

7-130—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67.

---

### சுகாதார இலாகா—மட்டக்களப்பு

பாவித்த எக்ஸ்றே படங்கள் விற்பனை

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலுள்ள 1,180 இருத்தல் பாவித்த எக்ஸ்றே படங்களின் விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள், மட்டக்களப்பு சுகாதார சேவை அத்தியட்சகரால் 16.7.1973 திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. எந்தக் கச்சேரியிலாவது பிணைப்பணமாக ரூபா 25 கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு, கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களுக்கான பத்திரங்கள் கொடுபடமாட்டா. கேள்வியாளர்கள் தங்கள் சொந்தப் பத்திரங்களை இணைப்பிரதிகளாகத் தயாரித்து, முத்திரையிடப்பட்ட கூடுகளில் இடதுபக்க மேல் மூலையில் " எக்ஸ்றே படவிற்பனைக்கான கேள்விப்பத்திரம் " எனக் குறிப்பிடவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் 1 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட காரியாலயத்தில் அதற்கெனவுள்ள பெட்டியில் போடலாம். அல்லது சுகாதார சேவை அத்தியட்சகரிடமோ நேர்முகமாகக் கொடுக்கலாம். கேள்வியாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பதிவு தபால் மூலமும் அனுப்பலாம்.

4. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது சகல கேள்விப்பத்திரங்களையோ நிராகரிக்கவோ அல்லது ஏதாவதொன்றினை ஏற்றுக்கொள்ளவோ அரசாங்கத்திற்கு உரிமையுண்டு. விளம்பரத்திற் குறிப்பிடப்பட்ட சகல நிபந்தனைகளும் கண்டிப்பாக அனுசரிக்கப்படாதவிடத்து எந்தவொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

5. விரும்பும் கேள்வியாளர்கள் வேலை நேரங்களில் மட்டக்களப்பு பொது வைத்தியசாலை அதிபரின் அனுமதியுடன் எக்ஸ்றே படங்களைப் பார்வையிடலாம். கேள்விப்பத்திரத்தில் திருத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட இடங்களில் கேள்வியாளர்கள் கையொப்பமிட்டிருக்க வேண்டும். கேள்வியாளர்கள் முழுப் படங்களுக்கும் ஒரு தொகையைக் குறிப்பிட வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட (ஏழு) 7 நாளைக்குள் மட்டக்களப்பு சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயத்தில் தம்மால் குறிப்பிடப்பட்ட தொகைப்பணத்தைக் கட்டி, பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பணம் கட்டி (3) மூன்று நாளைக்குள், மேற்படி பொருளை மட்டக்களப்பு பொது வைத்தியசாலை எல்லைக்கு வெளியே அப்புறப்படுத்தி விடவேண்டும்.

7. மேற்காட்டிய 6 ம் பந்தியிற் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய நடவாத பட்சத்தில் பிணைப்பணம் அரசாங்கத்திற்குரியதாய் விடும். இன்னும் ஏதாவது விபரங்கள் தேவைப்படின் மட்டக்களப்பு சுகாதாரசேவை அத்தியட்சகரிடமிருந்து அறியப் பெறலாம்.

வைத்திய கலாநிதி வி. சிங்கநாயகம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு.

சுகாதார சேவை அத்தியட்சகர்
அலுவலகம்,
மட்டக்களப்பு, 20.6.73.

7-41—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 66.

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்கான வெவ்வேறுன கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1973 ம் ஆண்டு யூலை மாதம் 31 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

" இராஜாங்கனைத் திட்டத்தில் காடுவெட்டுதல், காணி மட்டப் படுத்தல், காணி திருத்தியமைத்தல் "

| | |
|---|---|
| **கேள்விப் பத்திரம் இல. 1.**—இடது கரை நிலப் பகுதிகள் 1 + 2 இல் வி. ஓ. பி. இல. 711/12/1எ இல் காணி மட்டப்படுத்தலும் காணி திருத்தியமைத்தலும் ... ... | 385 ஏக்கர் |
| **கேள்விப் பத்திரம் இல. 2.**—இடது கரை நிலப்பகுதி 4 இல் வி. ஓ. பி. இல. 721/12/1எ இல் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்தல் ... ... | 316 ஏக்கர் |
| இடதுகரை நிலப்பகுதி 4 இல் வி. ஓ. பி. இல. 722/12/1எ இல் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்தல் ... | 146 ஏக்கர் |
| **கேள்விப் பத்திரம் இல. 3.**—வலது கரை நிலப்பகுதிகள் 2 + 3 இல் வி. ஓ. பி. இல. 716/12/1 எ இல் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்தல் ... | 311 ஏக்கர் |
| வலது கரை நிலப்பகுதிகள் 4 + 5 இல் வீ. ஓ. பி. இல 171/12/1எ இல் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்தல் ... | 360 ஏக்கர் |
| **கேள்விப் பத்திரம் இல. 4.**—வலது கரை நிலப்பகுதிகள் 7 + 9 இல் வி. ஓ. பி. இல. 607/12/1எ இல் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்தல் ... | 265 ஏக்கர் |
| **கேள்விப் பத்திரம் இல. 5.**—வலது கரை நிலப்பகுதிகள் 5, 8 + 9 இல் வி. ஓ. பி. இல. 560/12/1எ இல் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்தல் ... | 220 ஏக்கர் |
| வலது கரை நிலப்பகுதி 9 இல் வி. ஓ. பி. இல. 561/12/1எ இல் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்தல் ... | 102 ஏக்கர் |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 1,00,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தவர்களும் வேலையை வெற்றிகரமாகவும் விரைவாகவும் நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத பொறித் தொகுதிகளையும் இயந்திர சாதனங்களையுடையவர்களுமான ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். இரண்டு கேள்விகளுக்கு அல்லது குறைவானதற்கு, குறைந்தபட்சம் 150 பரிவலுவுக்கு மேற்பட்ட குறைந்தது இரண்டு ஊர்ந்து இழுபொறிகளும் நீர்ச்சத்தியால் இயங்கும் றிப்பர்ஸ்யையுடைய 60 பரிவலுவுக்கு குறையாததுமான இரண்டு ஊர்ந்து இழுபொறிகளும் தேவைக் குரியனவாயிருத்தல் வேண்டும்.

இயந்திரப் பொறிகள் திறமையாக இயங்கும் நிலையிலும் இறக்குமதித் திகதியிலிருந்து பத்து வருடங்களுக்கு மேற்படாததாயும் இருத்தல் வேண்டும். கேள்வி கோருவோர் தங்களது இயந்திரப் பொறிகளின் தொடர் எண்கள், இறக்குமதி செய்யப்பட்ட திகதிகள் உடபட முழு விபரங்களையும் கொடுத்து ஒப்பந்தம் செய்யு முன் அவ்வியந்திரப் பொறிகளைப் பார்வைக்குக் காட்டும் நிலையிலும் இருத்தல் வேண்டும்.

3. கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்தோ அல்லது தம்புத்தேகமையிலுள்ள இராஜாங்கனைத் திட்டத்தின் நீர்ப்பாசனக் கட்டுமானப் பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்தோ பெறக்கூடியதாகவுள்ள படிவங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 7 இல் உள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திலோ அல்லது இராஜாங்கனைத் திட்டத்தின் கட்டுமானப் பொறியியலாளரின் அலுவலகத்திலோ அல்லது ஏதேனுமொரு கச்சேரியிலோ கேள்வி ஒவ்வொன்றிற்கும் கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 250 செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டைக் காண்பிக்குமிடத்து கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். 1973 ம் ஆண்டு யூலை மாதம் 27 ம் திகதியன்று பிற்பகல் 2.30 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்விப் பத்திரங்கள் உள்ளடங்கியிருக்கும் உறைகள் பொறியிடப்பட்டு உறையின் மேல் " இராஜாங்கனைத் திட்டத்தில் காடு வெட்டுதல், காணி மட்டப்படுத்தல், காணி திருத்தியமைத்

தல் ஆகியவற்றுக்கான கேள்விகள்" எனக் குறிப்பிட்டு 1973 ம் ஆண்டு யூலை மாதம் 31 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது திணைக்களச் செயலகத்தின் 3 ம் மாடியின் 10 ஆம் இலக்க அறையிலுள்ள திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களை கொழும்பு 7 பௌத்தலோக மாவத்தையிலிருக்கும் நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திலிருக்கும் பிரதிப் பணிப்பாளர் (கட்டுமானம்) அவர்களிடமிருந்தோ அல்லது இராஜாங்கனைத் திட்டத்தில் நீர்ப்பாசன அலுவலகத்திலுள்ள கட்டுமானப் பொறியியலாளரிடம் இருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

கே. கதிர்காமன்,
பிரதிப் பணிப்பாளர் (கட்டுமானம்),
நீர்ப்பாசனப் பணிப்பாளருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு யூன் மாதம் 23 ம் திகதி.

7–78—06.07.73 ந திகதிய வர்த்தமானி இல. 67

---

## இறப்பர் பொதிகளை ஏற்றிச் செல்லுதல்

### கேள்விப் பத்திர அறிவித்தல்

346 ஆம் இலக்கத்தில் பேர்குசன் ரோட்டு, மட்டக்குளி, கொழும்பு 15 லுள்ள அரசினர் மத்திய ரப்பர் பண்டசாலை என்ற இடத்திலிருக்கும் இத்திணைக்களத்தின் பொதிகள் கட்டும் நிலையத்திலிருந்து ஒவ்வொன்றும் 250 இருத்தல் தாள் இறப்பரைக் கொண்ட பொதிகளை 1973 ம் ஆண்டு செத்தெம்பர் 1 ம் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு ஓகஸ்து 31 ம் திகதி வரையுள்ள காலத்திற்கு கொழும்பு இறங்குதுறைக்கு லொறிமூலம் ஏற்றிச் செல்வதற்கான கேள்விகளை 10 அல்லது அதற்கும் அதிகமான லொறிகளையுடைய, போக்குவரத்து ஒப்பந்தகாரர்களிடமிருந்து **1973 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 10 ந் திகதி மு. ப. 10.00 மணிவரை,** பொருள் கொள்வனவுத் திணைக்கள கேள்விப் பத்திர சபைத் தலைவர் பெற்றுக் கொள்வர்.

2. இறங்கு துறையில் இறப்பர் பொதிகளை கப்பலில் ஏற்றும் பொழுதும் இத்திணைக்களத்தின் போக்குவரத்து சேவை நடைபெறுதபொழுதும் தான் இப் போக்குவரத்து சேவை தேவைப்படும்.

3. பகலிலும், இரவிலும், எல்லா வேலை நாட்களிலும், பகிரங்க விடுமுறை நாட்களிலும், குறுகிய அறிவித்தலில் இப் போக்குவரத்து சேவையை மேற்கொள்ள தெரிவு செய்யப்படும் கேள்விப் பத்திரகாரர் தயாராயிருத்தல் வேண்டும்.

4. எந்த ஒரு அல்லது எல்லா கேள்வியையும், எந்தவித கேள்விக்கிடமுமின்றி நிராகரிக்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட கேள்வியை/கேள்விகளை முழு ஒரு வருட காலத்திற்கோ அல்லது அதன் ஒரு பகுதிக் காலத்திற்கோ ஏற்கும் உரிமையை பொருள் கொள்வனவு ஆணையாளர் தமக்கென வைத்துள்ளார்.

5. மீளப் பெறக்கூடிய கேள்விப் பத்திர வைப்புப் பணமான ரூபா 100/ இன் மேல் இத்திணைக்களத்திற் பெறக்கூடிய படிவங்களில் இரட்டைப் பிரதியில் கேள்வியைக் குறிப்பிட்டு, பதிவுத் தபால் மூலம் பொருள் கொள்வனவுத் திணைக்களம், த. பெ. இல. 147, 5 வது தட்டு, வை. எம். பீ. ஏ. கட்டடம் கொழும்பு 1 இல் இருக்கும் கேள்விப் பத்திர சபைத் தலைவருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். இன்றேல் 1973 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 10 ந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் இத்திணைக்களத்திலுள்ள கேள்விப் பத்திர பெட்டியில் போடலாம். மேற்பக்க இடது கோடியில், "டோபே மத்திய ரப்பர் பண்டசாலையிலிருந்து கொழும்பு இறங்குதுறைக்கு தாள் இறப்பர் பொதிகளை ஏற்றிச் செல்லுதற்கான கேள்விகள்" என தெளிவாக குறிப்பிட வேண்டும்.

6. கேள்விப் பட்டிகள் சுட்டிக் காட்ட வேண்டியது :—

(i) டோபே மத்திய ரப்பர் பண்டசாலையிலிருந்து கொழும்பு இறங்குதுறைக்கு 250 இருத்தல் நிறை கொண்ட பொதியை ஏற்றிச் செல்லுவதற்கான வீதம்.—

ரூ. ச.

(ii) கப்பலில் ஏற்றப்படாத சரக்கை திருப்பி ஏற்றிச் செல்ல நேரிடின் கொழும்பு இறங்கு துறையிலிருந்து டோபே மத்திய ரப்பர் பண்டசாலைக்கு 250 இருத்தல் நிறை கொண்ட பொதியை திருப்பி ஏற்றிச் செல்வதற்கான வீதம்—

ரூ. ச.

(iii) கப்பலில் சரக்கு ஏற்றப்படாததின் நிமித்தம் ஒரு லொறி இறங்குதுறையில் தாமதிக்கும் காலத்திற்கு அந்த லொறிக்கு ஒரு மணித்தியாலத்திற்கான மேலதிக கூலி வீதம்—

ரூ. ச.

6 வது பந்தி III க்குரிய குறிப்பு :

(i) மேலதிக கூலி எனப்படுவது வழமையான துறைமுக தாமதத்தை கருதுவதோ அன்றி அதனை உள்ளடக்கியதாகாது. மேலும் "ஏற்றப்படாத சரக்கு" தொடர்பில் முறையே கப்பல் ஏஜென்றுகள் எத்தனை மணித்தியாலங்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கிறார்களோ அத்தனை மணித்தியாலங்களுக்கு மட்டும் தான் இந்த மேலதிக கூலி மட்டுப்படுத்தப்படும்.

(ii) ஏற்றப்படாத சரக்கை இறங்கு துறையிலிருந்து டோபே மத்திய ரப்பர் பண்டசாலைக்கு திருப்பி ஏற்றிச் செல்லுதற்கு மேலதிக கூலி எதுவும் கொடுக்கப்படமாட்டாது. திருப்பி ஏற்றிச் செல்லும் கூலி மட்டுமே கொடுபடும்.

7. மேற்குறித்த மேலதிக கூலியைவிட வேறெந்த தரிப்புக் கூலியும் கொடுபடமாட்டாது.

8. அனுப்பப்படும் இறப்பரை ஏற்றிச் செல்லுங்கால் ஏற்படும் எந்தவித இழப்பினுலோ, சேதத்தினுலோ எழும் எந்த பணவுரிமைக் கோரிக்கைக்கும் தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் பொறுப்பாவார்.

9. போக்குவரத்துச் சேவையை நடாத்தும் நோக்கத்திற்காக ரூ. 5,000/ ஐக் கொண்ட வங்கி உத்தரவாதமொன்றைக் கொடுத்து ஒப்பந்தமொன்றை செய்யுமாறு தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் வேண்டப்படுவார்.

10. 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாட்கள் நஷ்டஈட்டு கட்டளைச் சட்டத்தின்கீழ் (117 ம் அத்தியாயம்) நிலையியல் சட்டத் திருத்தங்களின் கீழ், அறிவித்தல்கள் அன்றி திருத்தங்களின்கீழோ, ஒப்பந்தகாரரின் பணியாட்களால், அன்றி அவர்கள் தொடர்பில் எழும் எந்தப் பணவுரிமையையும் தெரிவு செய்யப்படும் கேள்வியாளரோ ஈடு செய்து இத்திணைக்களத்தினை அப் பொறுப்பிலிருந்து விடுவித்தல் வேண்டும்.

11. இச்சேவையை நடாத்துதற்கு இலங்கைப் பிரசைகளாக உள்ள பணியாட்களையே வேலைக்கமர்த்தல் வேண்டும். எந்த ஒரு பணியாள் விரும்பத்தகாதவரென கருதுமிடத்து அவரை வேலைக்கமர்த்துவதை மறுக்கும் உரிமையை பொருள் கொள்வனவு ஆணையாளர் தமக்கென வைத்துள்ளார். அங்ஙனமே அப் பணியாளரை வேலைநீக்கம் செய்வதற்கு தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் உடனேயே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

12. ஒப்பந்தம் செய்யப்பட்ட முழுக்காலத்திற்கும், ஏற்றிச் செல்லப்படவிருக்கும் சரக்கிற்கு, முழுக் காப்புறுதியை, தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

13. 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 10 ந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வை. எம். பீ. ஏ. கட்டடம், 5 வது தட்டு கொழும்பு 1 இல் இருக்கும் எனது அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வியாளர்கள் விரும்பினுல் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

14. வை. எம். பீ. ஏ. கட்டடம் 5 ஆவது தட்டு கொழும்பு 1 இல் இருக்கும் பொருள் கொள்வனவு ஆணையாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எம். சி. சி. பர்ணாந்து,
பொருள் கொள்வனவு ஆணையாளர்.

பொருள் கொள்வனவுத் திணைக்களம்,
த. பெ. இல. 147,
5 ஆவது தட்டு, வை. எம். பீ. ஏ. கட்டடம்,
கொழும்பு 1,
1973 ஜூன் 22.

7–128—06.07.73 ந திகதிய வர்த்தமானி இல. 67

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் தேதி மு.ப. 10.00 மணி வரை, பின்வரும் வேலைக்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

விவரணம்

(1) ஹாறகமையிலுள்ள இடத்தை அகழ்தலும் மட்டமாக்கலும்—ஈசி/546

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ரூபா 25,000/- தொகைக்குக் குறையாத சிவில் பொறியிடல் வேலைகளுக்காக இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- க்கான கேள்விப்பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் கேள்விப்பத்திரச் சாதனங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கட்டணமாக ரூபா 25/- க்கான பற்றுச்சீட்டையும் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன்பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், கேள்விப் பத்திரக் கட்டுப் பணத்தைக் காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

இரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு-5.

7-101—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

## இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம்

### ஹிங்குரானை சீனிக் கூட்டுத்தாபனத்திற்கு தேவையான இயந்திரங்களும் உபகரணங்களும்

இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் மேற் கூறப்பட்ட ஸ்தலத்திற்கு இயந்திரங்களும் உபகரணங்களும் விநியோகிக்க கேள்விப்பத்திரங்களை அழைக்கின்றது. மேல் கூறிய இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்முதல் செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட சேமிப்பு நிதி உபயோகப்படுத்தப்படும்.

கேள்விப்பத்திரங்களும் ஏனைய விபரங்களும் கீழ் கையொப்பமிடப்பட்ட அதிகாரியின் காரியாலமாகிய இல. 651, அல்விஸ் றீகல் மாவத்தை, கொழும்பு-5 ல் 1973 ஜூன் 25 ம் திகதி முதல் ஆகஸ்ட் 24 ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள், ஒரு தொடர் பத்திரங்களை பெற திருப்பி எடுக்கக் கூடிய ரூபா 50/- கட்டப்படல் வேண்டும். மேலதிக பிரதிகளுக்கும், இரத்துச் செய்யப்பட்ட பத்திரங்களுக்கும் திருப்பி எடுக்கமுடியாத ரூபா 25/ கட்டப்படல் வேண்டும்.

தலைவர்,
இலங்கை சீனி கூட்டுத்தாபனம்.

இல. 651, அல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 5,
திகதி 22 ஜூன், 1973.

7-93—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

## காட்டுத் திணைக்களக் கேள்வி அறிவித்தல்

### கட்டடங்கள் அமைத்தல்

பின்வரும் கட்டடங்கள் அமைப்பதற்கான கேள்விகளை 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதி மு.ப. 10 மணி வரை த. பெ. இல. 509, கொழும்பு-2 என்ற முகவரியிலுள்ள வனபாதுகாவல் அதிபர் ஏற்றுக்கொள்வார்.

1. தாவர வளர்ப்பு மனை—ஆராய்ச்சிக் கிளை, காட்டுத் திணைக்களம், கொழும்பு.
2. தாவர வளர்ப்பு மனை—எறபத்தை (மலைநாட்டுப் பகுதி)
3. தாவர வளர்ப்பு மனை—கொட்டவ (தென் பகுதி)

2. கியூ ரோட், கொழும்பு 2 என்ற முகவரியிலுள்ள வனபாதுகாவல் அதிபர் அலுவலகத்தில் 11 ஆம் இலக்க அறையில் சிரேஸ்ட உதவி வனபாதுகாவல் அதிபர் திரு. எல். சீ. ஏ. த. எஸ். விஜேசிங்க அவர்களிடமிருந்து பெறப்படும் படிவத்தில் இரட்டைப்பிரதிகளிலான கேள்விகள், வனபாதுகாவல் அதிபர் அலுவலகத்திலுள்ள கேள்விகளுக்கான பெட்டியிற் போடப்படவேண்டும். அல்லது வனபாதுகாவல் அதிபர், கியூ ரோட், கொழும்பு-2 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் வழங்குவதற்கு மீளப் பெறத்தக்க பிணைப்பணமான ரூபா 100/- ஐ கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியில் வன பாதுகாவலதிபர் கணக்கு இல. 34 இல் வரவு வைக்கப்பட்ட தற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 1973 யூலை 26 ஆம் திகதி பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் ஒவ்வொரு விடயத்திற்கும் வெவ்வேறு கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

3. மாதிரிப்படம், பொருள் மதிப்பீட்டுப் பட்டியல் அடங்கலான மேலதிக விபரங்களை கியூ ரோட், கொழும்பு-2 ல் உள்ள வனபாதுகாவல் அதிபர் அலுவலகத்தில் அல்லது காலி, நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள பகுதிக் காட்டு அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

எல். சீ. த எஸ். விஜேசிங்க,
வனபாதுகாவல் அதிபருக்காக

வனபாதுகாவல் அதிபர் அலுவலகம்,
த. பெ. இல. 509,
கியூ ரோட்,
கொழும்பு-2.

7-88—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

## சிறு கைத்தொழிற்றிணைக்களம்

மாத்தளை மின்தறி நெசவு நிலையத்தைப் பழுது பார்ப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் சிறுகைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவரால் 1973.7.26 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்திற் கட்டிட வேலைக்கென ரூபா 6,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட வேலைகட்கெனத் தம்மைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 50/- ஐ வைப்புப்பணமாக இந்தத் திணைக்களத்திலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.7.25 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்

தொடர் இல. 3/1—(1/55)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.6.22.

7-79—06.70.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

**வெற்றுத் தார்ப் பீப்பாக்கள், வெற்று உருக்கு பீப்பாக்கள், வெற்று சீமெந்து உறைகளை கொள்வனவு செய்து அப்புறப்படுத்துவதற்கான கேள்விப்பத்திரம்**

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு, ஆள்புல வேலைகள் பிரிவு ஊவா பிராந்தியக் கந்தோர் கேள்விச்சபைத் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள், இலங்கையரிடமிருந்தும், இலங்கையரின் கொம்பனிகளிடமிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும் :

1. வெற்றுத் தார்ப் பீப்பாக்கள்,
2. வெற்று உருக்குப் பீப்பாக்கள்,
3. வெற்று சீமெந்து உறைகள்.

2. கேள்விப் பத்திரங்கள் 1073 ம் வருடம் ஜூலை மாதம் 20 ந் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கட்டி அதற்கான பற்றுச் சீட்டை சமர்ப்பிப்போருக்கு மாத்திரம் 1973.7.18 ம் திகதி மு.ப. 10.00 மணிவரை கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். பணத்தை வேலைப் பணிப்பாளர் அலுவலகம் அல்லது எந்தக் கச்சேரிகளிலும் செலுத்தலாம்.

3. ஒப்பந்தம் ஓர் ஆறு மாதத்திற்காவது, அதன் பின்னர் அரசாங்கம் தன் விருப்பத்திற்கிணங்க ஒரு மாதத்திற்கோ அல்லது மேலோ நீடிப்பதற்கான உரிமையுடையது. கேள்விப்பத்திரக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து நாலு வாரங்களுக்கு தமது விலைக் குறிப்பீட்டை ஏற்கப்படற்பாலதாக வைத்திருக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

4. மேலும் விபரங்களை, பண்டாரவளை ஊவாப் பிரிவு வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பாலசுப்பிரமணியம்,
வேலைகள் பணிப்பாளர்,
ஊவாப் பிரதேசம்.

வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,
பண்டாரவளை,
1973.06.22.

7–76—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

**இலங்கை அரச கடற்படை**

பின்வரும் வேலைகளுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை இலங்கைக் கடற்படைக் கேள்விச் சபைத்தலைவர் ஏற்றுக்கொள்ளுவார் :—

| | வேலையின் தன்மை | கேள்விப்பத்திரங்களின் முடிவு திகதி | வேண்டப்பட்ட தகைமை ரூ. | ச. |
|---|---|---|---|---|
| (அ) | கொழும்பு, கோல்பக்கிலுள்ள வேலைக்களக் கட்டடத்திற்குத் திருத்தங்களையும் மாற்றங்களையும் பூர்த்தி செய்வதற்கு | 1973, யூலை 25 .. | 2,00,000 | 0 |
| (ஆ) | திருகோணமலை, டொக்யாட்டில் உள்ள "ஈ" 319 ஆம் இலக்கக் கட்டடத்திற்குத் திருத்தங்களையும் மாற்றங்களையும் பூர்த்திசெய்வதற்கு (ஐந்து மணமனைகளாக மாற்றப்படுகின்றது) | 1973, யூலை 25 .. | 2,00,000 | 0 |
| (இ) | திருகோணமலை, டொக்யாட், இலங். க. படை, திஸ்ஸ இல் உள்ள களஞ்சியக் கட்டடத்திற்குத் திருத்தங்களையும் பழுது பார்த்தல்களையும் பூர்த்தி செய்வதற்கு | 1973, யூலை 25 .. | 50,000 | 0 |

2. கொழும்பு 1, இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகத்தின் தலைமைப் பொறியியல் அலுவலரிடமிருந்து பெறப்படும் பிரதி விண்ணப்பங்களில் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இத்தலைமை அலுவலக நிதி, குடியியல் நிருவாக அதிகாரியின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 100/– கட்டப்பட்டு, அப்பற்றுச்சீட்டை 17 ஆம் இலக்க அறையில் சமர்ப்பித்தால் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி வரை தலைமைப் பொறியியல் அலுவலரினால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். திரும்பப் பெறமுடியாத கேள்விப்பத்திரப்பணமாக 5/– ரூபாவும் கொடுக்கப்படவேண்டும். காசோலைகள், காசுக்கட்டளைகள், தபால்கட்டளைகள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதியுள்ள அரசாங்க ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பெடுப்பதற்கான எழுத்து மூலமான சான்று பகரக்கூடிய ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்விப்பத்திரத்திற்குத் தகுதியுடையவராவர்.

4. கேள்விப் பத்திரங்கள் இத்தலைமை அலுவலகத்தில் 14 ஆம் அறையிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடுதல் வேண்டும், அல்லது முதலாம் பந்தியில் கூறப்பட்டபடி கேள்விச்சபைத்தலைவருக்குக் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால் மூலம் அத்தபாலுறையின் இடது பக்க மூலையில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே "கொழும்பு கோல்பக்கிலுள்ள வேலைக்களக் கட்டடத்திற்கு திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்வதற்கான கேள்விப்பத்திரம்", "திருகோணமலை, டொக்யாட்டில் உள்ள "ஈ" 319 ஆம் இலக்கக் கட்டடத்திற்குத் திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்வதற்கான கேள்விப்பத்திரம்", "திருகோணமலை, டொக்யாட், இலங். க. படை, திஸ்ஸ, இல் உள்ள கட்டடத்திற்குத் திருத்தங்களையும் பழுதுபார்த்தல்களையும் செய்வதற்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். நேரத்திற்கும் திகதிக்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

5. கேள்விப்பத்திரம் ஆரம்பிக்கப்படும் திகதியிலிருந்து எட்டுக் கிழமைக்காலவெல்லைக்குள் கேள்வியாளர்கள் தம் வேண்டுதல்களைக் கேட்கும்படி வேண்டப்படுகின்றனர்.

6. ஒரு கேள்விப்பத்திரத்தின் ஏதாவது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதோ அல்லது ஆட்சேபனை இன்றி ஒன்றையோ அன்றி முழுக் கேள்விப்பத்திரங்களையோ தன்னெண்ணப்படி நிராகரிப்பதற்கு கேள்விச் சபைத்தலைவர் உரிமையுடையவராவார். கேள்விப் பத்திரங்களுடன் கொடுக்கப்படும் கேள்விப்பத்திரத்தின் பொது நிபந்தனைகளுக்கும் இவ்வறிவித்தலில் காணப்படும் எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டாயமாக அமையாத கேள்விப்பத்திரம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. எவராவது ஒரு கேள்வியாளர் கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதிக்கு முன்னர் கேள்விச்சபைத்தலைவருக்கு அறிவிக்காமல் கேள்விக்கு மறுப்பு தெரிவித்தாலோ அன்றி சமூகமளியாது விட்டாலோ கேள்வி வைப்புப் பணம் முடிக்கு உரியதாக கொள்ளப்படும்.

8. கேள்வியாளராகத் தெரியப்படுபவர் இந்த உடன்படிக்கையின் கீழ் வேலையைச் செய்வதற்கு இலங்கைத் தொழிலாளரை மட்டும் பவலைக்கு அமர்த்த வேண்டும். அத்துடன் இந்த வேலையை நடாத்தும் சேுதியிலிருந்தே பெரும்பாலும் இத்தகைய தொழிலாளரை நியமிக்கவும் வேண்டும்.

9. மேலே குறிப்பிடப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் கேள்விப் பத்திரங்கள் ஆரம்பிக்கப்படும் நேரத்திற்குச் சமூகமளிக்கக் கேள்வியாளரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ அனுமதிக்கப்படுவார்கள்.

10. இத்தலைமை அலுவலகத்தின் 17 ஆம் இலக்க அறையில் மாதிரி முறைகளைப் பார்வையிட முடியும். கொழும்பு 1, கடற்படைத் தலைமை அலுவலகப் பொறியியல் அலுவலருடன் தொடர்பு கொள்வதன் மூலம் கட்டட வேலைகளையும் மாதிரி முறைகளையும் பார்வையிட முடியும்.

11. மேலும் விபரங்களுக்குத் தலைமைப் பொறியியல் அலுவலருக்கு விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

எச். எஸ். ஜே. போல்சிங்,
துணைநிலை ஏவுநர் (ஈ),
கடற்படைத்தளபதிக்காக.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு யூன் மீ 27 ந் த.

7–152—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பாவித்த பொருட்கள் ஏலவிற்பனை

1973 ம் ஆண்டு ஜூலை 26 ந் திகதி காலை பத்து (10) மணிக்கு புதிய செயலகக் கட்டிடத்தில் அதாவது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கோட்டை, கொழும்பு என்னும் விலாசத்தில் அமைந்துள்ள புதிய செயலகக் கட்டிடத்தில் பின்வரும் அலுவலக உபகரணங்களும் மோட்டார் உதிரிப் பாகங்களும் பொது ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

பொருட்கள் பின்வருமாறு :

3 ரெமிங்டன் ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரங்கள்
1 ஹோர்மிஸ் ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரம்
1 இம்பீரியல் ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரம்
2 இம்பீரியல் சிங்களத் தட்டெழுத்து இயந்திரங்கள்
4 அட்லர் சிங்களத்தட்டெழுத்து இயந்திரங்கள்
2 ஒலிவெட்டி சிங்களத் தட்டெழுத்து இயந்திரங்கள்
5 மேசைக் கடிகாரங்கள்
8 சின, பீக்கொக், ரல்லி (ஈருளிகள்) துவிச்சக்கரவண்டிகள்
1 டைனமோ ஆமேச்சர்கர்
1 அதிர்ச்சி உறிஞ்சி
7 கிளட்ஸ் பிளேட்ஸ்
4 பிரேசர் பிளேட்ஸ்
1 சுற்றுஸ்பிரிங்ஸ்
6 உருக்கு ஸ்பிரிங்ஸ் பிளேட்டுக்கள்
1 வொக்ஸோல் அமைதியாக்கி
2 ரிம் கியர்கள்
1. டை ரொட்பார்
1. ஜீப்பெற்றோல் கோப்பை
1. ஹோல்டன் கார்ப் பூட்டு
5 ஹோஸ்ப் பைப்புகள்
10 எண்ணைச் சீல்கள்
12 கிளட்ஸ் ஸ்பிரிங்ஸ்
1 கியர் பெட்டிச்சில்லு
1 கொயில் ஸ்ப்ரிங் பார்
6 போல் ரேசர்கள்
1 பித்தளைப் பிறஸ் (துடைப்பம்)
1 விநியோகக் கோப்பை
19 ஜீப் ரயர்கள்
24 கார் டயர்கள்
6 டியூப்புக்கள்

மேற்கூறிய பொருட்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவேட்டு அறையில் 1973 ஜூலை இருபத்து நாலா (24) ந் திகதியிருந்து பார்வையிடலாம். ஏல விற்பனையின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு உடனடியாகப் பணத்தைச் செலுத்தித் திணைக்கள வளவிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

பி. ஈ. பெர்னன்டோ,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு-1,
22 ந் திகதி யூன் 1973.

2–82—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

## ஸ்ரீலங்கா பொலிஸ்படை

1973 ம் ஆண்டு ஆடி மாதம் 16 ம் திகதி காலை 10.30 மணிக்கு கீழ்க்காணப்படும் பொருட்கள் கல்கிசை பொலிஸ் அதிபர் காரியாலயத்தில் (தெகிவளை) பகிரங்க ஏலத்தில் விற்பனையாகும்.

| | |
|---|---|
| 1. சைக்கிள் | 04 |
| 2. தட்டச்சு இயந்திரம் ஆங்கிலம் | 03 |
| 3. தட்டச்சு இயந்திரம் சிங்களம் | 01 |
| 4. எண்ணெய் போடும் (1 கலன் டின்கள்) | 101 |
| 5. எண்ணெய்போடும் (4 கலன் டின்கள்) | 36 |
| 6. தும்புமெத்தை | 07 |
| 7. உடுப்பு ராக் | 02 |
| 8. பிலியட் மேசை | 01 |
| 9. கைக்கு போடும் மேஸ்கள் (கிரிக்கட்) | 03 |
| 10. கிரிக்கட் பாட்ஸ் | 04 |
| 11. பித்தளைப் பூட்டு | 03 |
| 12. இரும்புப் பூட்டு | 10 |
| 13. நுளம்புவலை (பெரிது) | 10 |
| 14. நுளம்புவலை (சிறிது) | 30 |
| 15. பெட்ரோல்மாக்ஸ் லாம்பு | 01 |
| 16. இரும்புக்கதிரை | 01 |
| 17. அலுமினிய பேசின் | 01 |
| 18. அலுமினிய சோஸ்பான் | 01 |
| 19. அலுமினிய சட்டி (பெரிது) | 01 |
| 20. அலுமினிய சட்டி (சிறிது) | 09 |

குறிப்பு :—1973 ம் ஆண்டு ஆடி மாதம் 16 ந் திகதி காலை 8 மணி முதல் 10.00 மணிவரை மேற்கூறிய பொருட்களை பரிசோதிக்க முடியும்.

பொருட்களை வாங்குவோர் பணத்தைக் கட்டிக் கொள்வதோடு அதே தினம் பொருட்களை அகற்ற வேண்டும்.

க. முருகேசபிள்ளை,
பொலிஸ் அதிபர்,
கல்கிசை.

பொலிஸ் காரியாலயம்,
தெகிவளை,
73.6.22.

7–18—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

## கிளிநொச்சி வனபரிபாலன வட்டம்

1. 55 முதிரை குத்திகள்—559·9 கன அடி.
2. 32 பாலை குத்திகள்—388·2 க. அடி.
3. 7 யாவரணை குத்திகள்—53·2 க. அடி.
4. 1 காட்டு மா குத்தி—47·7 க. அ.
5. 3 வேப்பம் குத்திகள்—39·8 க. அடி.
6. 26 கம்பி கட்டைகள்.
7. 600 கட்டு பிளந்த விறகு.
8. 11 ஆமணக்கம் பலகைகள்—9·8 க. அ.
9. 9 வேப்பம் பலகைகள்—5·2 க. அ.
10. 8 முதிரை பலகைகள்—8·8 க. அ.
11. 7 ஆமணக்கம் பிற வெட்டுகள்—3·5 க. அ.
12. 10 பாலை பிற வெட்டுகள்—8·2 க. அ.
13. 14 ஆமணக்கம் தீராந்திகள்—8·4 க. அ.
14. 37 பாலை தீராந்திகள்—26·8 க. அ.
15. 52 முதிரை தீராந்திகள்—33·9 க. அ.

கிளிநொச்சி வனபரிபாலன வட்டத்தின் பல இடங்களிலும் உள்ள மேற்கூறப்பட்டவை, வட பெரும்பாக வன அதிகாரியால் 1973 ம் ஆண்டு யூலை மாதம் 25 ம் திகதி காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

## ஒலுமடு வனபரிபாலன வட்டம்

1. 4 முதிரை குத்திகள்—25·0 க. அ.
2. 1 யாவரணை குத்தி—5·1 க. அ.
3. 1 பாலை குத்தி—5·6 க. அ.
4. 5 முதலாம் தர தேக்கம் கம்புகள்.
5. 15 முதிரை பலகைகள்—4·2 க. அ.
6. 74 முதிரை பிற வெட்டுகள்—26·2 க. அ.
7. 46 யாவரணை பிற வெட்டுகள்—6·4 க. அ.

ஒலுமடு வனபரிபாலன வட்டத்தில் பல இடங்களிலும் உள்ள மேற்கூறப்பட்டவை, வட பெரும்பாக வன அதிகாரியால் 1973 ம் ஆண்டு யூலை மாதம் 24 ம் திகதி மாலை 2.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முள்ளியவளை வனபரிபாலன வட்டம்

1. 3 முதிரை குத்திகள்—49·1 க. அடி.
2. 2 பாலை குத்திகள்—44·0 க. அ.
3. 3 சமுண்டலை குத்திகள்—24·8 க. அ.
4. 1 நிளல்வாகை குத்தி—13·0 க. அ.
5. 100 கம்பி கட்டைகள்.

முள்ளியவளை வனபரிபாலன வட்டத்தில் பல இடங்களிலும் உள்ள மேற்கூறப்பட்டவை, வட பெரும்பாக வன அதிகாரியால் 1973 ம் ஆண்டு யூலை மாதம் 24 ம் திகதி காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேலதிக விபரங்களை உரிய வட்ட வன அதிகாரியின் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

பகிரங்க ஏல விற்பனை யாவும் உரிய வட்ட வன அதிகாரி கந்தோரில் நடாத்தப்படும்.

வட பெரும்பாக வன அதிகாரி.

வட பெரும்பாக வன அதிகாரி காரியாலயம்,
யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு யூன் மீ 06 ந் உ.

7-148—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

## கடற்றொழில் திணைக்களம்

### பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும் இடங்களிலும் பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்கள் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. அட்டவணையில் குறிக்கப்பட்ட இடங்களில் என்ஜின்களைப் பார்வையிடலாம்.

3. அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஏல விற்பனை நடைபெறும் திகதிகளைத் தவணையிடவோ அல்லது நீக்கவோ ஏல விற்பனையை நடாத்தும் உத்தியோகத்தருக்கு உரிமையுண்டு.

4. கொடுப்பனவுகள் பணமாகப் பின்வரும் முறைப்படி செலுத்தப்படவேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக என்ஜின் விற்கப்பட்ட விலையில் ¼ பங்கு.

(ஆ) விற்கப்பட்ட விலையின் ¾ பங்கு மூன்று நாட்களுள் செலுத்தப்படல் வேண்டும்.

(இ) எந்த ஒரு என்ஜினைக் குறித்து விலைகேட்டல் தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 21 நாட்கள்வரை ஒதுக்கி வைக்கப்படும். இந்த வகையில் என்ஜினின் விற்பனை விலையில் ¼ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்தவேண்டும். விலைகேட்டல் ஏற்கப்படுமாயின், விற்பனை விலையின் மீதி ¾ பங்கும், இறுதியாக ஏற்றுக்கொள்ளல் அறிவித்தலுக்கு 3 நாட்களுக்கு முன்னராகச் செலுத்தப்படவேண்டும். இப்படிச் செய்யத் தவறின், வைப்புப் பணம் இழத்தலில் முடியும். விலைகேட்டலைத் தள்ளுபடி செய்யின் வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

5. ஏலத்தில் விற்ற என்ஜின், உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தும் வரை, இவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கிய வனையே சாரும்.

#### அட்டவணை

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு, கொழும்பு.

| வள்ள என் | என்ஜினின் வகையும் இலக்கமும் | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| — | ரோர்பிடோ—10464 | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன வள்ளைச்சாலை, மட்டக்குளி, கொழும்பு 15 | 1973.07.25 | காலை 9.30 |
| — | ரோர்பிடோ—10400 | | | |
| — | றஸ்ஸ்லீயன்—202188 | | | |
| — | றஸ்ஸ்லீயன்—203189 | | | |
| — | றஸ்ஸ்லீயன்—202169 | | | |
| — | றஸ்ஸ்லீயன்—203190 | | | |
| — | றஸ்ஸ்லீயன்—112819 | | | |
| — | றஸ்ஸ்லீயன்—112621 | | | |

பேர்மிரிவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு— புத்தளம்

| வள்ள என் | என்ஜினின் வகையும் இலக்கமும் | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| — | பேர்க்கின்ஸ் W.S.SO. | நிற்று ஸ்ரோர்ஸ், தொடுவாவை | 1973.07.26 | காலை 9.30 |

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு, 3,
1973 ம் ஆண்டு ஜூன் மீ

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

7-107—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11 மணிக்கும், மற்றும்நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிரீம் கோட் புரேக்கரூல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன்பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு,** அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கு சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுரலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் ஏதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **யூலை** | 6.7.73 | வெள்ளி | 27.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 4.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 11.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 18.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| **ஓகத்து** | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| **செத்தெம்பர்** | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை. அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.